# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1987 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1987, மே மாதம் 21 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1987, மே மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 75*

## 1987 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்

[1987, மே மாதம் 21 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 32/86 / 1819

## 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனைத்தொடர்ந்து பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1984 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தினல் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :— 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(அஅ) சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி (ஆய்வு கூடச் சேவைகள்) ;" ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஏ) போதனு வைத்தியசாலை என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட, அவ்வமைச்சரது அமைச்சின் அலுவலர் ஒருவர் ;" ;

(இ) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில் "மருத்துவர்கள் கல்லூரியினல் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அக் கல்லூரியின் பிரதிநிதி ஒருவர் ; அத்துடன்", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மருத்துவர்கள் கல்லூரியினல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அக் கல்லூரியின் பிரதிநிதியொருவர் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(ஈ) அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியில் "இலங்கை மகப்பேற்று மருத்துவ, பெண் நோய் மருத்துவக் கல்லூரியினல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அக்கல்லூரியின் பிரதிநிதியொருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை மகப்பேற்று மருத்துவ, பெண் நோய் மருத்துவக் கல்லூரியினல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அக் கல்லூரியின் பிரதிநிதியொருவர் ;" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

(உ) அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(த) இலங்கைப் பல் மருத்துவக் கழகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அக்கழகத்தின் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(ந) மருந்தாக்க வர்த்தகர் கழகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அக்கழகத்தின் பிரதிநிதியொருவர்." ;

(2) அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவில் "(1) ஆம் உட்பிரிவின் (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட) அல்லது (ண) என்னும் பந்திகளின் கீழ்", என்னும் சொல்லமைப்பிற்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின் (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட), (ண), (த) அல்லது (ந) என்னும் பந்திகளின் கீழ்", என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலமும்.

"முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு, "உபாயம்" என்பதன் வரைவிலக்கணத்தில் "ஆனால் அவுடதமொன்றை உள்ளடக்காது". என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆனால் ஆயுள்வேத உபாயமொன்றை, ஹோமியோபதி உபாயமொன்றை அல்லது அவுடதமொன்றை உள்ளடக்காது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.